//நினைவூட்டு -2// // அவசரம் தனி கவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந,க,எண் 378/அ2/2022 நாள் 17.03.2022.

பொருள் பள்ளிக்கல்வி - வங்கிக் கணக்கு விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள " PROPOSED TO REMITTANCE " Column த்தில் உள்ள தொகையினை அரசுக் கணக்கில் செலுத்தக் கோரியது -நினைவூட்டல் – சார்பு.

பார்வை

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 000606/ FC /2022-4 நாள் 16.03.2022
2. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 1206/அ2/2022 நாள் 10.02.2022
3. மாவட்டக் கல்வி அலுவலக இணையதள நினைவூட்டு
4. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக இணையதள வழியான நினைவூட்டு

பார்வை 2 முதல் 4 வரை காணும் கடிதத்தில் படி பல முறை இணைதள வழியான தகவல் தெரிவித்தும் இந்நாள் வரை பல அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் பராமரித்து பயன்பாட்டில் உள்ள வங்கி விவரங்களில் வேலூர் மாவட்டக் கல்வி அலுவலக ( DEO SITE) இணையதளம் மூலம் அனுப்பப்பபட்ட படிவத்தில் " PROPOSED TO REMITTANCE " Column த்தில் உள்ள தொகையினை அரசுக் கணக்கில் செலுத்தக் கோரி பல முறை தகவல் தெரிவித்தும் இந்நாள் வரை அதற்குரிய தொகையினை அரசு கணக்கில் செலுத்தி உரிய செலுத்து சீட்டு ( Challan ) நகல் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் சமர்பிக்காதது மிகவும் வருத்தம் அளிப்பதாக உள்ளது என தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக நிதிக்காட்டுப்பாட்டு அலுவலர் பார்வை 1ல் காணும் கடிதத்தில் மூலம் தெரிவித்துள்ளார்கள்.

மேற்காண் படிவத்தில் அனுப்பப்பட்ட படிவத்தில் உள்ள தொகையினை நாளை 18.03.2022 ற்குள் உடனடியாக அரசு கணக்கில் செலுத்தி அதற்குரிய செலுத்து சீட்டு ( Challan ) நகல் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைத்து Challan நகலினை SCAN செய்து deovlredn@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்திட அனைத்து

அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறும் பட்சத்தில் சமப்ந்தப்பட்ட தலைமைஆசிரியர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் மேலும் சார்ந்த பள்ளி தலைமைஆசிரியரே முழுபொறுப்பேற்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு**

செலுத்தப்பட வேண்டிய கணக்கு தலைப்பு

// ஒப்பம் //

// க.முனுசாமி //

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்.

பெறுநர்

தலைமை ஆசிரியர்கள்

அரசு / உயர்/ மேல்நிலைப் பள்ளிகள்

வேலூர் மாவட்டம்

நகல்,

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கையின் பொருட்டும் அனுப்பலாகிறது.